07.11.2025

O.S.No. 46/2024

DW1– செந்தில்கணேஷ் – த/பெ. சுடலைமுத்து

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.11.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. தபசில் சொத்துக்கள் ஆதியில் சர்வே எண்.689/2 ல் இருந்தது என்றால் சரிதான். மேற்படி நிலம் தற்போது புல எண்.689/2 ஏ, புல எண்.689/2 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.689 ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 17 செண்ட் என்றால் சரிதான்.

2. மரியம் பொன்னாம்மாளை நான் பார்த்ததில்லை. மரியம்பொன்னமாளுக்கு எந்த உரிமையுண்டோ அந்த உரிமைதான் எங்களுக்கும் உள்ளது. மரியம் பொன்னாம்மாள் மூலம்தான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். மரியம் பொன்னாம்மாளுக்கு தபசில்சொத்துக்கள் பி.வா.சா.ஆ.1,2,3 மூலம் பாத்தியம் என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். இந்தகிரைய ஆவணங்களை கிரையம் வாங்குவதற்கு முன்பு பார்த்துள்ளேன். மரியம் பொன்னாம்மாள் கிரையம் பெற்ற 3 கிரைய ஆவணங்களையும் சொத்துக்களை பிரிவின்றி தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

3. எனது எதிர்கோரிக்கை பிராது, எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் புல எண்.689/2 ஆரம்பத்தில் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புல எண்.689/2 ,

1945 ல் மாடக்கண்ணு நாடார் வகையறாவிடமிருந்து மரியம் பொன்னாம்மாள் கிரையம் வாங்கியுள்ளார். மேற்படி கிரையப்பத்திரத்தில் புல எண்.689/2 ல் 2 ஏக்கர் 17 செண்டில் பிரிவின்றி பாதியில் பொதுவில் 4 ல் 1 பாகம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் மரியம் பொன்னாம்மாள் பிரிவின்றி மொத்த விஸ்தீரணத்தில் சரிபாதி வாங்கியுள்ளார்.

4. பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் பிரிவின்றி பாதியில் 4 ல் 1 பாகம் என காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக புரியவில்லை. இதை புரியாமல் தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் கூட்டெழுத்துக்களாக உள்ளதால் என்னால் படிக்க இயலவில்லை.

5. பி.வா.சா.ஆ.2 ஆவணத்திலும் பிரிவின்றி பாதியில் பிரிவின்றி 4 ல் 1 பாகம் என எழுதப்பட்டுள்ளது என்றால் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் கூட்டெழுத்துக்களாக உள்ளதால் என்னால் படிக்க இயலவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பென்சிலால் எழுதப்பட்டது யாரால் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணம்மூலம் மரியம் பொன்னம்மாள் 2 ஏக்கர் 17 செண்டில் சரிபாதி வாங்கியுள்ளார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் 54 செண்ட் இருப்பதாக உரிமை கோருகிறேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மரியம் பொன்னம்மாள் 27 செண்ட் கிரையம் வாங்கியதாக துலங்குகிறது என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ.3 ஆவணம் மூலமாக 2 ஏக்கர் 17 செண்டில் பிரிவின்றி பாதியில் பிரிவின்றி 4ல் 1 பங்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த ஆவணம் மூலமாகவும் 54 செண்ட் உரிமை கோருகிறேன். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமாக மரியம் பொன்னம்மாள் 27 செண்ட்தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பத்திரம் மூலமாகவே மரியம் பொன்னம்மாளுக்கு 2 ஏக்கர் 17 செண்ட் பாத்தியம் இல்லை என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே எழுத்துதெரியவில்லை, படிக்க முடியவில்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் உரிமை கோரும் ஆவணங்களில் சரியாக புரியக்கக்கூடிய legible copy யை தாக்கல் செய்ய நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் மூலமாக மரியம் பொன்னம்மாள் 2 ஏக்கர் 17 செண்டில் பிரிவின்றி 1 ஏக்கர் 8 செண்ட் கிரையம் வாங்கியதாக துலங்கும் என்றால் சரியல்ல. மீதமுள்ள 1 ஏக்கர் 8 செண்டில் கருவேல் நாடார் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்ற 54 செண்ட் கட்டுப்படும் என்றால் சரியல்ல. அதைபோல் வா.சா.ஆ.3 மூலம் அண்ணாமலை நாடார் 2 ஏக்கர் 17 செண்டில் கிரையம் பெற்ற பிரிவின்றி 4ல் 1 பங்கு அதாவது 54 செண்ட் கட்டுப்படும் என்றால் சரியல்ல. நான்தான் பி.வா.சா.ஆ.2,3 மூலமாக கூடுதலாக 54 செண்ட் பாத்தியம் என ஆவணங்களுக்கு விரோதமாக பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

9. மரியம் பொன்னம்மாள் மற்ற பங்காளிகளுடன் சொத்துக்களை பிரிவினை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்குமுன்பு வில்லங்கசான்றிதழ் பார்த்துதான் வாங்கினேன். நான் பார்த்தவில்லங்சான்றிதழில் வழக்குசொத்து சம்பந்தமாக ஆறுமுகப்பாண்டி பொன்னுத்துரை இடையேயான பாகபத்திரம் துலங்குகிறது என்றால் சரியல்ல.

10. என் மீது, வாதி காவல்நிலையத்தில் நிலஅபகரிப்பு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. உரிமை ஆவணங்களுக்கு விரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட வா.சா.ஆ.5 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11. மரியம் பொன்னம்மாளின் இறப்புசான்றிதழ் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. மரியம் பொன்னம்மாள், ராமர் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தாக்கல் செய்த ஆவணமான மரியம் பொன்னம்மாள், ராமர் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறியீடு செய்யப்படவில்லை. **தற்போது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. மேற்படி நீ.ம.சா.ஆ.1ல் மரியம்பொன்னம்மாள், ராமருக்கு 1 ஏக்கர் 63 செண்ட் எழுதிக்கொடுத்ததாக துலங்கிறது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் மரியம் பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்ட இடம்

காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை, அவர் கணவருக்கான இடம் என்று காட்டப்பட்டுள்ளது. அவரது கணவருக்கான இடம் எந்த புல எண் என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

13. நீ.ம.சா.ஆ.1 ஆவணம் முலம் மரியம் பொன்னம்மாளுக்கு 2 ஏக்கர் 17 செண்ட் பாத்தியம் என துலங்காது என்றால் சரிதான். ராமர், பொன்னுச்சாமிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கிரைய ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அதன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்டட காரணம் இல்லை என்றால் சரிதான்.

14. ராமர், பொன்னுச்சாமிக்கு எழுதிக்கொடுத்த இடங்கள் புர எண்.689/2 ஏ–ல் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 மூலம் 1 ஏக்கர் 62 செண்ட் நிலத்தைதான் பொன்னுச்சாமிக்கு கிரையம்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் ராமர் அவரது பாட்டி தனக்கு ஏற்பாட்டு ஆவணம் மூலம் கிடைத்த 1 ஏக்கர் 62 செண்ட் நிலத்தை எழுதிக்கொடுத்ததாக துலங்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் அதே செட்டில்மெண்டை காட்டி 54 ½ செண்ட் எழுதிக்கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. பி.வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்தின் ஒருபகுதிதான் இந்த வழக்குதபசில் சொத்து என்றால் சரிதான். அது புல எண்.689/2 பி–ல் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 மூலம்1 ஏக்கர் 62 செண்டை எழுதிக்கொடுத்தபிறகு பி.வா.சா.ஆ.5 மூலம் 54 ½ செண்டை

எழுதிக்கொடுத்தது மோசடியானது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்த ராமருக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. மோசடியாக ஏற்படுத்தப்பட்ட வருவாய் ஆவணத்தை வைத்து ஒரே பத்திரத்தை காட்டி கூடுதல் விஸ்தீரணமுள்ள சொத்தை ராமர், பொன்னுச்சாமிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

16. பி.வா.சா.,ஆ.4 ல் சொத்தின் கிழக்குஎல்லையாக பழனிநாடார்சொத்து என காட்டப்பட்டுள்ளது, அதில் தன் கையிருப்பு சொத்தாக ராமர் காட்டவில்லை என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ.5 ல் அந்த கீழ்பாதி சொத்தைபொறுத்து ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ல் தெற்குஎல்லையாக நாரயணன் நாடார் தற்காலம் கண்ணன் வகையறா இடத்திற்கு வடக்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கு எல்லையாக ராமர் கைவசம் இடம் என காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

17. பொன்னுச்சாமி, பாஸ்கர் பெயருக்கு பிறப்பித்துக்கொடுத்ததாக சொல்லும் பி.வா.சா.ஆ.6,7 ஆவணங்களும் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. அதைபோல் மாரியப்பன் பெயருக்கு பாஸ்கர் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கிரையப்பத்திரமும், பாஸ்கர் என் பெயருக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.9 கிரைய ஆவணமும் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

18. நான் தாக்கல்செய்த பி.வா.சா.ஆ.10 வில்லங்கசான்றிதழில் 3 லக்க பதிவாக கருவேல் நாடார் பெயரிலுள்ள பதிவு துலங்குகிறது

என்றால் சரிதான். அதைபோல் பி.வா.சா.ஆ.10 ல் 10 வது பதிவாக அண்ணாமலை நாடார் புல எண்.689/2 ல் கிரையம் பெற்ற பிரிவின்றி 4 ல் 1 பங்கு பத்திரப்பதிவு துலங்குகிறது என்றால் சரிதான். நான் கூறியுள்ள அளவுகள் படி எனக்கு சொத்தில் அனுபவம் கிடையாது, எதிர்கோரிக்கை தபசில்சொத்தைபொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு நான் கோரியுள்ள பிராது நிலைக்கத்தல்ல என்றால் சரியல்ல. அதைபோல் என்னுடைய கிரையத்திற்கு முன்பே ஏற்பட்ட வாதிக்கும், அவரது சகோதரருக்கும் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை குறை கூறவோ, ரத்துசெய்யவோ எனக்கு எந்த சட்டஅருகதையும் கிடையாது என்றால் சரியல்ல.

19. மேற்படி பாகரிவினை எனக்கு எபபோது தெரியவந்தது என்றால் வழக்கு தாக்கல்செய்தபின்பு தான் தெரியவந்தது. எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்தவருக்கு சொத்தில் உரிமை இல்லைஎன தெரிந்திருந்தும் நான் மோசடியாக வம்பு கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. புல எண்.689/2 பி–ல் 28 செண்ட் நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதி அதை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த பிராது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.